ராணி காமிக்ஸ்
துப்பறியும் நாய்
டைகர்
தோன்றும்
கறுப்புப் பிசாசு
ரூ 2

அதிசய பொம்மை!

உலகில் எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் சரி, பொம்மைகளுக்கு எப்பொழுதுமே ஏகப்பட்ட கிராக்கி உண்டு. ஜப்பான் நாட்டில் இப்போது புதுவகையான பொம்மைகளை செய்து அனைவரையும் வியப்புக்கு உள்ளாக்கி இருக்கிறார்கள்.

படத்தைப் பாருங்கள். குழந்தைகள் உருவத்தில் இருக்கும் இவர்கள் யார் என்று தெரிகிறதா? ரஷிய அதிபர் கோர்பச்சேவ், இங்கிலாந்து இளவரசர் சார்லஸ், டயானா, அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ், ஆப்பிரிக்காவின் கறுப்பர் இனத் தலைவர் நெல்சன் மண்டலே, அமெரிக்காவின் புகழ்பெற்ற நடிகை எலிசபெத் டெய்லர், ஜப்பான் நாட்டு பிரதமர் கைபூ, ஜப்பான் நாட்டு இளவரசர் கிகோ, இளவரசி அகிஸ்கின்னோன்மியா போன்ற முக்கிய புள்ளிகளைத்தான் இப்படி பொம்மைகளாகச் செய்திருக்கிறார்கள். இவர்களுக்குத்தான் இப்பொழுது ஜப்பானில் பயங்கர கிராக்கி.

இப்படி குழந்தைகள் உருவத்தில் இருக்கும் இவர்களை பார்த்தவுடனேயே கையில் எடுத்து கொஞ்சத் தூண்டுகிறதாம். அதனால் அங்குள்ளவர்கள் தங்களுக்கு பிடித்தமானவர்களை கூட, இப்படி பொம்மைகளாக செய்து வீட்டில் வைத்துக்கொள்கிறார்கள்!

ரூ. 100 பரிசு!

உங்களுக்கு படம் வரையத் தெரியுமா?

உங்களுக்கு படம் வரையத் தெரியுமா? உங்கள் திறமையை வளர்த்துக்கொள்ள இதோ ஓர் அரிய வாய்ப்பு. உங்களுக்குள் மறைந்து கிடக்கும் ஓவியத் திறமையை வெளியே கொண்டு வந்து வளர்க்க "ராணி காமிக்ஸ்" ஒரு போட்டியை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறது.

ஒரு வெள்ளைத் தாளில் உங்கள் கற்பனை ஓவியத்தை கறுப்பு மையால் (பென்சிலால் வரையக் கூடாது.) வரைந்து அனுப்புங்கள். படத்திற்குப் பின்னால் உங்கள் பெயரையும், முகவரியையும் எழுதி அனுப்புங்கள். ஒருவர் எத்தனை படம் வேண்டுமானாலும் வரைந்து அனுப்பலாம்.

படங்களை அஞ்சல் உறையில் வைத்து, முகவரி எழுதவேண்டிய இடத்தில், இத்துடன் உள்ள முகவரியை வெட்டி ஒட்ட வேண்டும்.

ஒவ்வொரு "ராணி காமிக்ஸ்" இதழிலும் நான்கு படங்கள் தேர்ந்தெடுத்துவெளியிடப்படும். அந்தப் படங்களை வரைந்தவர்களுக்கு தலா ரூ. 25 பரிசு வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:-

ஓவியப் போட்டி,
"ராணி காமிக்ஸ்",
சென்னை-600 007.

பரிசு பெற்ற படங்கள்!

எம். செல்வி.
மூலனூர்.

வி. கபாலி சந்திரபோஸ்.
வேளாங்கண்ணி.

இ.எஸ். ஜெயஸ்ரீ.
ஆத்தூர்.

டி. சூர்ய பிரகாசம்.
மதுரை.

ராணி காமிக்ஸ்-175 அக்டோபர் 1-15
(மாதம் இருமுறை இதழ்) 1991

துப்பறியும் நாய்

டைகர் தோன்றும் கறுப்புப் பிசாசு

ஜூலியும் டேவிட்டும் அக்கா தம்பிகள். இருவரும் நியூயார்க் நகரில் படித்துக் கொண்டிருந்தார்கள். கோடை விடுமுறையை ஆனந்தமாகக் கழிக்க, இயற்கை எழில்கொஞ்சும் காட்டுப் பகுதிக்கு இருவரும் சைக்கிளில் உல்லாசப் பயணம் புறப்பட்டார்கள்.

ஒரு வாரத்திற்குத் தேவையான பொருட்களை எடுத்துக்கொண்டு காட்டுக்கு வந்தார்கள். இரவில் தங்கிக்கொள்ள கூடாரம் அமைத்தார்கள்.

இருவரும் ஆற்றில் இறங்கினார்கள்.
ஏய், ஜூலி! அங்கே பார் ஆற்றில் ஏதோ மிதந்து வருகிறது!
ஆமாம்! மரப்பலகை போலத் தெரிகிறது!

ஆனால் பலகை மீது ஏதோ இருப்பது போலத் தெரிகிறதே!
ஆமாம்! நீ சொல்வது சரிதான்! பலகை இந்தப் பக்கமாகத்தான் வருகிறது!

நாய் போலத் தெரிகிறதே! போய் கயிறு எடுத்து வா! நான் இடுப்பில் கட்டி ஆற்றில் இறங்கு கிறேன்!
இதுவும் நல்ல யோசனைதான்! இரு கயிறு எடுத்து வருகிறேன்!
கயிறை ஜூலி இடுப்பில் கட்டிக்கொண்டு ஆற்றில் இறங்கினாள்.
டேவிட்! கயிற்றை இறுக்கிப் பிடித்துக்கொள்!
சீக்கிரம் போ! பலகை அந்தப் பக்கமாக போகிறது!
பலகையில் ஒரு நாய் சுருண்டு கிடந்தது. ஆற்று நீரோட்டத்தில் பலகை மிதந்து வந்துகொண் டிருந்தது. ஜூலி பலகையை நோக்கி நீந்திப் போனாள்.

பலகை அருகே வந்ததும், ஜூலி நாயை தூக்க முயன்றாள்.
அடேயப்பா! நாய் கறுப்பாக பிசாசு மாதிரியல்லவா இருக்கிறது!


ஜூலி நாயை தன் தோளில் போட்டுக் கொண்டு நீரோட்டத்தை எதிர்த்து நீந்தி வந்தாள்.
டேவிட்! என்னால் நீந்த முடியவில்லை! மூச்சிறைக்கிறது கயிற்றை இழு!
ஜூலி! கொஞ்ச தூரம்தான் மனம் தளராதே! எப்படியும் வந்துவிடலாம்!

ஜூலி ஒரு வழியாக நாயை கரைக்கு கொண்டு வந்தாள்.
டேவிட்! நாய் கறுப்பாக இருந்தாலும் அழகாகத்தான் இருக்கிறது! ஒரு கை கொடு. கரைக்கு கொண்டுபோய் விடலாம்!
குட்டி நாய் என்று நினைத்தேன்! பெரிய நாயாகத்தான் இருக்கிறது!

இருவரும் நாயை கரைக்கு கொண்டு வந்தார்கள்.
நாயின் உடம்பு ஜில்லென்று இருக்கிறதே!
நல்லவேளை நம் கண்ணில் பட்டது! இனி இதை பிழைக்க வைத்துவிடலாம்!

பாவம் ஜூலி! எப்படியாவது இதை பிழைக்க வைத்து விடு!
உஷ்...! சத்தம் போடாதே! ஒரு நிமிடம் இரு!
ஜூலி நாயின் இதய துடிப்பை ஆராய்ந்தாள்.
உயிர் இருக்கிறது ஆனால் இதயம் ரொம்ப பலவீனமாக இருக்கிறது! மூச்சுவிட சிரமப் படுகிறது!
செயற்கை முறையிலாவது சுவாசிக்க வையேன்!
அது எப்படி முடியும்! அதெல்லாம் நடக்காத காரியம்!
சரி! அப்படியானால் நான் விறகு பொறுக்கி வந்து தீ மூட்டுகிறேன்! குளிராவது கொஞ்சம் குறையும்!

டேவிட் விறகை பொறுக்கி வந்து தீ மூட்டினான்.
என்ன ஜூலி! நாய் கண்ணைக்கூட திறக்கவில்லை!
டேவிட்! நான் நாயை கவனித்துக் கொள்கிறேன் நீ போய் ஓய்வெடுத்துக் கொள்!

இரண்டு மணி நேரம் கழித்து உன்னை எழுப்புகிறேன்!
ஓ.கே. ஜூலி!

என் அன்பே கண்ணைத் திறக்க மாட்டாயா? உனக்கு ஆபத்து ஒன்றும் இல்லையடா!
ஜூலி, நாயின் முகத்தோடு முகம் வைத்து கொஞ்சினாள்.
அவளுடைய உடல் வெப்பம் பட்டதால் என்னவோ, அடுத்த நிமிடமே நாய் கண்ணைத் திறந்து பார்த்தது.
அட! கண் விழித்துவிட்டது!
ஜூலி மகிழ்ச்சியடைந்தாள்.
நாய் புது இடத்தையும், புது முகத்தையும் கண்டதால் ஒன்றும் புரியாமல் விழித்தது.
ஏய்... டேவிட்! இங்கே ஓடி வா! நாய் கண்விழித்துவிட்டது!
மகிழ்ச்சியோடு தம்பிக்கு குரல் கொடுத்தாள்.

டேவிட் கூடாரத்தில் இருந்து தூக்க கலக்கத்துடன் எட்டிப் பார்த்தான்.
என்ன ஜூலி!
இங்கே பார்த்தாயா? நாய் எழுந்துவிட்டது!
நாயைப் பார்த்து டேவிட்டும் பூரித்துப் போனான்.
அய்யா! நாய்க்கு உயிர் வந்துவிட்டது!
டேவிட்! பாலாடை கட்டியை கரைத்து பால் தயாரித்துக் கொண்டுவா! இதற்குக் கொடுப் போம்!
உடனே டேவிட் செயலில் இறங்கினான்.
என்ன ஜூலி! நாய் பாலைக் குடிக்கிறதா?
எல்லாவற்றையும் குடித்துவிட்டது!

மறுநாள் காலை—
ஜூலி! உணவு தீர்ந்துவிட்டதா?
ஆமாம் டேவிட்! அடுத்தவேளைக்கு சாப்பிட எதுவும் இல்லை!
சைக்கிளை எடுத்துச் சென்று சாப்பிட ஏதாவது வாங்கி வா!
டேவிட் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டதும், நாய் ஜூலியின் மீது காலைத் தூக்கிப் போட்டு, முகத்தை நாக்கால் தடவியது.
ஓகோ! உன்னை காப்பாற்றி உணவு கொடுத்ததற்காக செய் கையிலேயே நன்றி சொல்கிறாயா?
நாய் நன்றி உள்ளது என்பதை நிரூபித்துவிட்டது.

சரி! இங்கேயே இரு! எனக்கு வேலை இருக்கிறது. முடித்து விட்டு வருகிறேன்.

டேவிட் போய் ரொம்ப நேரம் ஆகிவிட்டது. ஏன் இன்னும் வரவில்லை!

தூரத்தில் டேவிட் வருவதைப் பார்த்த நாய், வாலை ஆட்டி செல்லமாக குரைத்தது.
டேவிட் வருகிறான்' அதைப் பார்த்துவிட்டுதான் நாய் குரைக்கிறது. பரவாயில்லை தூரத்திலேயே டேவிட்டை அடையாளம் கண்டு கொண்டுவிட்டதே!

ஜூலி! நமக்கு தேவையானவற்றை வாங்கிவிட்டேன். அப்படியே நாய்க்கு இறைச்சி வாங்கி வந்திருக்கிறேன்!
வெரிகுட்! நானே சொல்ல வேண்டும் என்று நினைத்தேன்!
இரவில் டேவிட்டும், ஜூலியும் சாப்பிட்டுவிட்டு படுத்திருந்தார்கள். அப்போது– ஒரு கறுத்த உருவம் அங்கே வந்தது
அட!
சைக்கிள் நிற்கிறது! அபேஸ் பண்ணிவிட வேண்டியதுதான்!
இதுதான் சமயம்! நன்றாக தூங்குகிறார்கள்!
வந்தவன் சைக்கிளை தள்ளிக்கொண்டு போக முயன்றான். ஆனால்–

காலடி ஓசை கேட்டதும் நாய் சுதாரித்துக் கொண்டது.
பரவாயில்லை சைக்கிள் திறந்து தான் இருக்கிறது! வசதிதான்!
அவன் சைக்கிளில் கைவைத்ததும் நாய் ஆக்ரோஷமாக குரைத்துக் கொண்டு பாய்ந்து வந்தது
அய்யய்யோ நாய் இருப்பதை கவனிக்க வில்லையே!
டேவிட்! திருடன் நம் சைக்கிளை திருட வந்திருக்கிறான். பிடி அவனை...
லொள்...! லொள்...!
நாய் குரைக்கும் சத்தத்தைக் கேட்டு ஜூலியும் டேவிட்டும் எழுந்தார்கள்.

ஜூலி தடுத்தாள்

இருவரும் திருடனை மிரட்டினார்கள்.

டேவிட்! நீ போய் போலீஸை அழைத்து வா! அவர்கள் வரும்வரை நாய் இவனை பார்த்துக்கொள்ளும்!
ஓ.கே. ஜூலி!
இல்லை! நான் திருட வரவில்லை. இந்த வழியாக சும்மாதான் போய் கொண்டு இருந்தேன்! என்னை நம்புங்கள்!
பாவம் ஜூலி! அவனை இந்த ஒருமுறை மன்னித்து விட்டு விடுவோம்!
சரி பிழைத்துப் போகட்டும்! இனி வந்தால் பார்த்துக் கொள்ளலாம்!
இருவரும் அவனை மன்னித்து அனுப்பி வைத்தார்கள்.

நாய் உஷாராகத்தான் இருக்கிறது.
காலடி ஓசையை வைத்தே திருடனை
கண்டுபிடித்துவிட்டதே!
ஆமாம் டேவிட்!
துப்பறியும் நாய்
போல் அல்லவா
செயல்பட்டிருக்கிறது.
ஆனால் பார்ப்பதற்கு பிசாசு
போல கறுப்பாக இருக்கிறது!

ஜூலி! உண்மையிலேயே
இது துப்பறியும்
நாய்தான்!
அப்படியா?
பிறகு எப்படி
ஆற்றில் அடித்து
வரப்பட்டது?


ஜூலி! பத்திரிகையை பார்!
நாய்க்கு இறைச்சி வாங்கி வரும்
பொழுது இறைச்சியை கட்டிக்
கொடுத்த பேப்பர் இது! தற்செய
லாக இதை படித்துப் பார்த்தேன்!
அப்பொழுது ஒன்றும் புரிய
வில்லை!
இப்போது
தான்
தெரிகிறது!
நீயும் படி!
டேவிட் ஜூலியை
படிக்கச் சொன்னான்.

இரண்டு லெட்சம் ரூபாய் நகை கொள்ளை! திருடர்கள் தப்பி ஓட்டம்!
விரட்டிச் சென்ற போலீஸ் நாய் காணாமல் போனது!
துப்பறியும் நாய் டைகர்
பத்திரிகையில் காணாமல் போன நாயை பற்றி செய்தி வந்திருந்தது.
நேற்று இரவு கிறிஸ்டியானாவின் வீட்டுக்குள் இரண்டு ஆசாமிகள் நுழைந்து இரண்டு லெட்சம் ரூபாய் மதிப்புள்ள நகையை திருடிச் சென்றுவிட்டனர். அவர்களை விரட்டிச் சென்ற துப்பறியும் நாய் டைகரை காணவில்லை!
ஜூலி! இப்பொழுது என்ன சொல்கிறாய்?
ஆமாம்! படத்தில் இருப்பதும் இதுவும் ஒன்றுதான். இதன் பெயரைச் சொல்லி அழைத்துப் பார்ப்போம்!
டைகர்! டைகர்!
தூங்கிக்கொண்டிருந்த நாயை ஜூலி டைகர் என்று பெயர் சொல்லி அழைத்ததும் படக்கென்று தலையை தூக்கிப் பார்த்தது.

பார்த்தாயா! எழுந்துவிட்டது. அப்படியானால் இது பெயர் டைகர்தான்!
டைகர் என்று கூப்பிட்டதும் நாய் ஓடிவந்து ஜூலியின் மேல் தாவியது
சந்தேகமில்லை! இது கண்டிப்பாக காணாமல் போன போலீஸ் நாய்தான்!
பரவாயில்லை! ஒரு நல்ல காரியம்தான் செய்திருக்கிறோம்!
டேவிட்! முதலில் நாம் டைகரை வீட்டுக்கு அழைத்து செல்வோம். பிறகு போலீசுக்கு தகவல் கொடுப்போம்!
சரி! கூடாரங்களை அவிழ்த்து கட்டி வைக்கிறேன்!
இருவரும் டைகரை போலீசிடம் ஒப்படைக்க முடிவு செய்தார்கள்.


மறுநாள் காலையில்— ஜூலியும் டேவிட்டும் டைகரை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார்கள்.
ஜூலி! டேவிட்! வருவதற்கு ஒரு வாரம் ஆகும் என்று சொன்னீர்கள். அதற்குள் வந்துவிட்டீர்கள்!
அது ஒரு பெரிய கதை அம்மா!
உள்ளே வா சொல்கிறேன்!


இதுதான் அம்மா நடந்தது!
ஜூலி டைகரை காப்பாற்றியதை சுருக்கமாக சொல்லி முடித்தாள்.
நல்லது! நீங்களே டைகரை அழைத்துச் சென்று போலீசிடம் ஒப்படைத்துவிடுங்கள்!

ஜூலியும் பீட்டரும் டைகரை அழைத்துக்கொண்டு கமிசனரை காணவந்தார்கள். அவர்களின் அப்பா எட்வினும் கூட வந்தார்.
டைகரின் கதை முடிந்துவிட்டது என்று நினைத்தோம்! பரவாயில்லை! உங்கள் திறமையை பாராட்டு கிறேன்!
டைகர் எப்படி சார் காணாமல் போனது?
நீங்கள்தான் பத்திரிகையில் படித்திருக்கிறீர்களே! திருடர்களை விரட்டி சென்றபோது, திருடர்கள் மயக்க மருந்து தெளித்து நாயை ஆற்றில் வீசி யிருக்கிறார்கள்!
கமிசனர் விளக்கிக் கூறினார்.
சே! டைகரை ரொம்பத்தான் கொடுமைப்படுத்தி யிருக்கிறார்கள்!
நீங்கள் டைகரை பார்த்திருக் காவிட்டால் இந்நேரம் டைகர் இறந்திருக்கும்! எட்வின்! நீங்கள் இப்படிப்பட்ட தைரியசாலிகளை பெற்றதற்கு, பெருமைப்படுகிறேன்.
கமிசனர் இருவரையம் பாராட்டினார்.

மூன்று நாள் கழிந்தது. நான்காம் நாள் காலை, ஜுலி, டேவிட்டைத் தேடி ஓடிவந்தாள்.
டேவிட்! எழுந்து விட்டாயா!
என்ன ஜுலி! ஏன் இப்படி பதட்டத்துடன் ஓடிவருகிறாய்!
டேவிட்! டைகர் நம்மைத் தேடி வந்திருக்கிறது! வந்து பார்!
உண்மையாகவா?
இருவரும் மாடியில் இருந்து எட்டிப் பார்த்தார்கள்.
இங்கே எப்படி வந்தது?
டைகர்! கத்தாதே! இதோ வருகிறோம்!
லொள்...! லொள்...!
அவர்களைக் கண்டதும் டைகர் வாலை ஆட்டிக்கொண்டுகுரைத்தது
ஜுலி டைகரை வீட்டிற்குள் அழைத்து வந்தாள்.
டைகர் எப்படியிருக்கிறாய்! இங்கே எப்படி வந்தாய்!
போலீ சாருக்கு டிமிக்கி கொடுத்து விட்டு வந்திருக்கும்!
டைகரா வந்திருக்கிறது!

ஜூலியின் அப்பா எட்வின் கமிசனருக்கு தகவல் சொன்னதும் அரை மணி நேரம் கழித்து கமிசனர் வந்தார்.
பார்த்தீர்களா? டைகர் எங்களிடமே டிமிக்கி கொடுத்து விட்டு உங்கள் வீட்டுக்கு ஓடிவந்துவிட்டது?
சார்! தயவுசெயது தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள்!
இல்லை! நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்! டைகர் உங்கள் குழந்தைகளுடன் இங்கேயே இருக்கட்டும்!
அப்பா! சரி என்று சொல்லுங் களேன்!
எதற்காக இந்த முடிவு இன்ஸ்பெக்டர்?
டைகர் முன்பு போல இல்லை. சரியாக சாப்பிட மாட்டேன்கிறது. எந்த வேலையிலும் அதற்கு நாட்டமில்லை. ஒரு மாற்றத் திற்காக இங்கேயே இருக்கட்டும்!

டைகர் இங்கு இருப்பதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை!
அப்பா! ரொம்ப நன்றி!
கொஞ்ச நாளைக்குத்தான். அதன்பிறகு டைகரை கூட்டிப் போய்விடுவோம்!

ஓ.கே.! நான் புறப் படுகிறேன்! டைகரை பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள்!
சரி சார்!
அய்யா! டைகர் இனி ஜாலிதான்!

அன்று மாலை ஜூலியும், டேவிட்டும் டைகரை கூட்டிக்கொண்டு நடந்து வந்தார்கள்.
நல்லவேளை டைகர் திரும்பவும் நமக்கு கிடைத்து விட்டது.
இனி ஒழுங்காக சாப்பிடும்!
திடீரென்று சாலையில் எதையோ பார்த்த டைகர் திமிறியது.
ஏய்... டைகர்! என்ன இது?
ஜூலி! டைகர் காரணமில்லாமல் இப்படிச் செய்யாது! கயிறை விடு பார்ப்போம்!
ஜூலி கயிறை விட்டதும் டைகர் பாய்ந்தோடியது.
டேவிட்! டைகர் எங்கே போகிறது? போய்ப் பாரேன்!
சரி ஜூலி!

டைகர்! ஓடாதே நில்!
டைகர்! அந்த ஆளை நோக்கி அல்லவா ஓடுகிறது!
லொள்...! லொள்...!
ஆ...! கறுப்புப் பிசாசு! இது இன்னும் சாகவில்லையா?
பாலத்தில் நின்றுகொண்டிருந்தவன் அதிர்ச்சியடைந்தான்
டைகர்! விடு அவரை!
ஏய்...! நாயை கூப்பிடு! என்ன இது?
டைகர் அவன் மீது பாய்ந்து கடித்துக் குதற ஆரம்பித்தது.
அதற்குள் ஜூலி, டைகரை பிடித்து அதன் வேகத்தை தடுத்தாள்.
மன்னித்துக்கொள்ளுங்கள். சார்!
முட்டாள்கள்! வெறி நாயை வீட்டுக்குள் பூட்டி வைக்கவேண்டியதுதானே! இப்படியா ரோட்டில் விடுவது?

அதற்குள் சாலையில் கூட்டம் கூடிவிட்டது.
வெறிபிடித்த நாயை சுட்டுக் கொல்ல வேண்டும்!
தெருவில் கூட்டி வந்த இவர்களை போலீசில் ஒப்படைக்க வேண்டும்!
நிறுத்துங்கள்! எங்கள் டைகர் ஒன்றும் வெறி நாய் இல்லை!
ஆளுக்கு ஆள் வாய்க்கு வந்ததை பேசினார்கள். திடீரென்று ஏற்பட்ட கலவரத்தைப் பயன்படுத்தி அவன் கூட்டததில் இருந்து நழுவிச் சென்றான். அவனுடைய பெயா மார்ட்டின்.
அவன் ஓடட்டும் விட்டுவிடு! டைகரை பிடித்துக்கொள்!
டைகர் ஏன் இப்படி முரண்டுபிடிக்கிறது!
கூட்டத்தில் இருந்து தப்பியவன் போக்குவரத்து நிறைந்த சாலையில் இறங்கி ஓடினான். அவனை விரட்டி டைகரும் சாலையில் இறங்கி ஓடியது.
டைகர் ஏன் அவனை விரட்டி ஓடுகிறது?
அய்யோ! சாலையில் போக்குவரத்து அதிகமாக இருக்கிறதே!

டேவிட்டும், ஜூலியும் நாயை பின்தொடர்வதற்காக சாலையில் இறங்கியபோது, ஒரு பஸ் அவர்களை கடந்தது. ஒரு வினாடிதான் என்றாலும் அந்த ஒரு வினாடியில் டைகர் அவர்கள் பார்வையில் இருந்து மறைந்துபோனது.
ஜூலி! பதட்டப் படாதே! டைகர் எங்கே போய்விடப் போகிறது!
சே! இந்த நேரம் பார்த்து பஸ் நம்மை பழிவாங்கி விட்டதே!

பஸ் சென்றதும், நாய் ஓடிய திசையை பார்த்தார்கள். வெறிச்சோடிக் கிடந்தது.
டைகர் எந்தப் பக்கம் சென்றிருக்கும்?
வா! இப்படிப் போய் பார்க்கலாம்!

அந்தத் தெருவில் தேடிப் பார்த்தார்கள்.
ஜூலி! டைகரை! இங்கேயும் காணவில்லையே இப்பொழுது என்ன செய்வது? அவன் யார்? ஏன் டைகர் அவனை விரட்டிச் சென்றது?
அவர்களுக்குள் வித்தியாசமான கேள்விகள் எழுந்தன.

அதேநேரம்– ஆற்றில் மிதந்து கொண்டிருந்த இயந்திரப் பட இல், அலெக்ஸ் என்பவன் பை னாகுலர் மூலமாக சாலையில் நடப்பதை வேடிக்கைப் பார்த் துக்கொண்டிருந்தான்.


அந்த இரண்டு பொடியர்களாலும் மார்ட்டினுக்கு ஏதோ ஆபத்து என்று நினைக்கிறேன்! மார்ட்டின் படகுத் துறைக்குத்தான் ஓடுகிறான். படகுத் துறைக்குச் சென்று மார்ட்டினை எப்படியாவது காப்பாற்ற வேண்டும்!

அதேநேரம்-
ஜூலி! அவன் இந்தப் பக்கம் வந்ததற்கான தடயம் இல்லையே!
டேவிட்! டைகர் குறிப்பிட்டு அவனை மட்டும்தான் விரட்டுகிறது. அவனும் டைகரை பார்த்து உறைந்து போய்விட்டான்...!
ஒருவேளை அவன் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவனாக இருக்கக்கூடும். இவர்கள்தான் டைகருக்கு மயக்க மருந்து கொடுத்து ஆற்றில் விசியிருப்பார்கள்! அதனால்தான் டைகர் அவனை விரட்டிச் சென்றிருக்கிறது!
ஜூலி! சரியாகச் சொன்னாய் உண்மையிலேயே அதுதான் நடந்திருக்கும்
ஒருவேளை அவன் பஸ்ஸில் அல்லது ஏதாவது, ஒரு காரில் ஏறி தப்பியிருக்க வேண்டும்!! டைகர் அவனை பின்தொடர்ந்து சென்றிருக்கும்.

ஜூலி சொன்னது போலவே மார்ட்டின் ஒரு காரில் ஏறி தப்பினான். டைகர் அவனை விரட்டியது.
கறுப்பு நாய், பிசாசு போல் அல்லவா என்னை விரட்டி வருகிறது! எப்படித் தப்பிப் பது?
டைகர் அரை மணி நேரம் காரை தொடர்ந்து விரட்டி வந்ததால், மூச்சுவாங்கியது. தொடர்ந்து ஓட முடியாமல் அப்படியே நின்றது.
அதற்குள் அவன் கார் திருப்பத்தில் திரும்பி மறைந்து போனது.
முடிவில் மார்ட்டின் படகுத் துறையை அடைந்தான் அங்கே அவனுடைய நண்பன் அலெக்ஸ் அவனுக்காக காத்திருந்தான்.
மார்ட்டின்! அந்த கறுப்புப பிசாசு உன்னை விரட்டி வந்ததே! அது இன்னும் சாக வில்லையா?
இல்லை அலெக்ஸ் அது எப்படியோ பிழைத்துவிட்டது அது நம்மை பிடித்துக் கொடுக்காமல் ஓயாது போலத் தெரிகிறதே! அதனிடமிருந்து எப்படியோ தப்பி வந்துவிட்டேன்!

இனி நாம் அந்தப் பிசாசின் கண்ணில் படக்கூடாது!
அது சாதாரண நாய் அல்ல! துப்பறியும் நாய்! சரியாக என்னை அடையாளம் கண்டுகொண்டது!
நகைப் பெட்டியுடன் நான் உனக்காக ஆற்றுப் பாலத்தில் காத்திருக்கும்போதுதான் அந்தப் பிசாசு என்னை பார்த்துவிட் டது! உடனே நகைப் பெட்டியை ஆற்றில் போட்டுவிட்டு தப்பி வந்துவிட்டேன்!
நாம் இப்போது அங்கே சென்றால் நகைப் பெட்டியை எடுத்துவிடலாம்!
சரி, புறப்பட லாம்! இப்போது ஆற்றில் தண்ணீர் வற்றியிருக்கும. நகைப் பெட்டியை எளிதில் எடுத்துவிடலாம்!
ஆற்றுப் பாலத்துக்கு மார்ட்டினும், அலெக்சும் படகில் புறப்பட்டார்கள்.

அலெக்ஸ்! எப்படியும் ஒரு மணி நேரத்தில் ஆற்று பாலத்திற்குச் சென்று நகைப் பெட்டியை எடுத்துவிடலாம்!

அதேநேரம்– ஜூலியும், டேவிட்டும் டைகரைத் தேடி அலைந்து கொண்டிருந்தார்கள்.
டைகர் எந்தப் பக்கம் சென்றிருக்கும்? எல்லா தெருவையும் சுற்றியாகி விட்டது!
இனி எங்கே போய்த் தேடுவது? ஒன்றும் புரியவில்லையே!
இருவரும் குழம்பிப் போயிருந்தார்கள். அப்போது–

அந்த வழியாக கமிசனர் வந்தார் அவர்களைக் கண்டதும் அருகில் வந்தார்.
அலோ ஜூலி! என்ன இந்தப் பக்கம்! முகம் ஏன் வாடியிருக் கிறது. ஏதாவது பிரச்சினையா?
ஆமாம் சார்! எங்களுடன் வந்த டைகரை காணவில்லை சார்!
என்னது? டைகரை காணவில்லையா! என்னம்மா சொல்கிறாய்?
ஆமாம் சார்! நாங்கள ஆற்றுப் பாலத்தில் டைகருடன் வந்து கொண்டிருந்தோம். அப்போது......
ஜூலி நடந்ததை ஒன்றுவிடாமல் சொல்லி முடித்தாள்.
அப்படியானால் கொள்ளையர்கள் ஆற்றங்கரையில்தான் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள்! சரி. நீங்கள் விட்டுக்குப் போங்கள்! டைகரை நான் பார்த்துக் கொள்கிறேன்!
ஜூலியும், டேவிட்டும் புறப்பட்டார்கள்.

ஆனால், அவர்கள் வீட்டுக்குச் செல்லவில்லை. நேராக ஆற்றுப் பாலத்தை நோக்கி நடையைக் கட்டினார்கள்!
ஜூலி! நாம் முதலில் ஆற்றுப் பாலத்துக்கு செல்வோம்!
டைகர் எப்படியும் நம்மைத் தேடி அங்குதான் வரும்!

அவர்கள் நினைத்தது போலவே டைகர் அவர்களைத் தேடி மோப்பம் பிடித்துக்கொண்டே வந்தது.
TOW

அதற்குள் ஜூலியும் டேவிட்டும் ஆற்றுப் பாலத்துக்கு வந்தார்கள்.
இந்த இடத்தில்தான் அவன் நின்றுகொண்டிருந்தான். இங்கே வைத்துதான் டைகர் அவன் மீது பாய்ந்தது!
ஜூலி! இங்கே பாரேன்!
திடீரென்று டேவிட் எதையோ பார்த்து குரல் கொடுத்தான்.

இந்த இடத்தில் சாக்பீசை வைத்து குறியிடப் பட்டிருக்கிறதே ஏன்:
டேவிட்! புரிந்து விட்டது. அவன் நகைப் பெட்டியுடன் இங்கே யாருக் காகவோ காத்திருந்திருக்கிறான்! டைகரைப் பார்த்த அதிர்ச்சியில் பெட்டியை ஆற்றுக்குள் போட்டு விட்டு சுவரில் அடையாளக் குறி வைத்துவிட்டு தப்பி ஓடியிருக்க வேண்டும்!
ஜூலியின் யூகம் உண்மையிலேயே சரியாகத்தான் இருந்தது.


தண்ணீர் வற்றிவிட்டது! வா, கீழே போய் நகைப் பெட்டியை தேடிப் பார்க்கலாம்!
டேவிட் இருட்டாக இருக்கிறது. பார்த்து இறங்கு!
இருவரும் பாலத்தில் இருநீத படிகட்டு வழியாக கீழே இறங்கினார்கள்.

டைகரும் நம்மைத் தேடி விரைவில் இங்கே வந்துவிடும்! அதற்குள் நாம் எப்படியாவது நகைப் பெட்டியை எடுத்துவிட வேண்டும்!
இருவரும் தைரியத்துடனும் புத்திசாலித்தனமாகவும் செயல்பட்டார்கள்.

சிறிது நேர தேடலுக்குப் பிறகு சேற்றுக்குள் ஒரு பெட்டி புதைந்து கிடப்பதை இருவரும் பார்த்தார்கள்,
டேவிட்! இதுதான் நகைப் பெட்டி என்று நினைக்கிறேன்
ஆமாம் ஜூலி! சரியாக கண்டுபிடித்து விட்டோம்!

அப்போது-
டேவிட்! ஏதோ சத்தம் கேட்கிறதே? என்ன சத்தம்?
ஆமாம்! ஏதோ இயந்திரப் படகு வருகிறது! நம்மை நோக்கித்தான் வருகிறது!
படகின் ஓசை கேட்டவுடனேயே இருவரும் நகைப் பெட்டியை சேற்றுக்குள் புதைத்து வைத்துவிட்டு, மறைந்துகொள்ள முயன்றார்கள்.

படகில் மார்ட்டினும், அலெக்கும் இருந்தார்கள்!
மார்ட்டின்! இந்த இடம்தான். படகை இன்னும் கொஞ்சம் கரைக்கு செலுத்து!
ஓ.கே.! பெட்டி எந்த இடத்தில் இருக்கிறது! சரியாகத் தெரியுமா? இல்லை தேட வேண்டுமா?

அதே நேரம்-
வா, ஜூலி! படியில் ஏறி மேலே சென்றுவிடுவோம்!
வேண்டாம் டேவிட்! மறைந்துகொள்ள இங்கேயே இடம் இருக்கிறது!


மார்ட்டின் டார்ச் லைட்டுக்கு உயிர் கொடுத்து விளக்கொளியை பாலத்தின் சுவரில் பாய்ச்சினான்.
அலெக்ஸ்! இதோ நான் போட்ட அடையாளக் குறி!
நீ பலே கில்லாடிதான்! இரு! முதலில் படகை கரையில் இழுத்து கட்டிவிடுவோம்!

ஜூலியும் டேவிட்டும், படிக்கட்டுக்கு பின்னால் மறைந்திருந்து நடப்பதை நோட்டமிட்டார்கள்.
ஜூலி! அதே ஆள்தான். ஆனால், இப்போதுகூட ஒருவன் இருக்கிறானே!
உஷ்! சத்தம் போடாதே! அநேகமாக அவர்கள் நகைப் பெட்டியைத் தேடித்தான் இங்கே வந்திருக்கிறார்கள்!

போலீஸ் இங்கே வருவதற்குள் சீக்கிரம் பெட்டியை எடு!
அவசரப்படாதே! சேற்றுக்குள் புதைந்திருக்கிறது என்று நினைக்கிறேன்!
இதோ! நகைப்பெட்டி கிடைத்து விட்டது!
மார்ட்டின் சேற்றுக்குள் இருந்து நகைப் பெட்டியை எடுத்தான்
மறைந்திருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த டேவிட் திடீரென்று கத்தினான்.
டேய்! திருட்டுபசங்களா? நகைப் பெட்டியை மரியாதையாக கொடுத்து விடுங்கள்!
டேவிட்! என்ன இது முட்டாள்தனம்!

அலெக்ஸ்! இந்தப் பொடியர்களிடம்தான் அந்தக் கறுப்பு பிசாசு இருக்கிறது!
விடாதே! அவர்களைப் பிடி!

இருவரும் ஆளுக்கு ஒருவரை பிடித்துக் கொண்டார்கள்.
டேய்! நீங்கள் தானே எங்கள் டைகரை ஆற்றுக்குள் தூக்கிப் போட் டீர்கள்!
ஆமாண்டா! அதைப் போலத்தான் உங்களையும் ஆற்றில் தூக்கிப் போடப் போகி றோம்!
அலெக்ஸ்! நீ போய் படகை இளப்பு! நான் இவர்களை பிடித்து வருகிறேன்!
விடு என்னை?
டேவிட்டும், ஜூலியும் முரட்டுப் பிடியில் சிக்கித் திணறினார்கள்.

அலெக்ஸ்! சீக்கிரம் வந்து படகை கிளப்பு! இவர்கள் கூச்சலிட்டு கூட்டத்தை கூட்டிவிடுவார்கள் போலிருக்கிறது!
இதோ வந்து விட்டேன்!

சிறுவர்களின் கூச்சலைக் கேட்டு போலீஸ்காரர் ஒருவர் ஓடி வந்தார். அதற்குள் டைகரும் அங்கே வந்துவிட்டது. படகில் இருக்கும் டேவிட்டையும், ஜூலியையும் பார்த்து குரைத்தது.
டேய்! அந்தப் பிசாசு வந்துவிட்டது. சீக்கிரம் படகின் வேகத்தைக் கூட்டு!
வொள்...! வொள்...!

போலீஸ்காரரின் கண்ணில் படவிட்டும், ஜூலியும் பட்டு விடக்கூடாது என்பதற்காக அவர்களை ஓர் அறையில் வைத்து பூட்டினார்கள்.
ஏய்...! இந்நேரத்துக்கு இங்கே என்ன செய்கிறீர்கள்...'
போலீசுக்கு சந்தேகம் வந்து விட்டது! அகப்பட்டு விடக் கூடாது!
ஏய்! அங்கே பார்! கறுப்புப் பிசாசு நம்மை தொடர்ந்து வருகிறது!
ஆமாம்! அந்த ஸ்பேனரை எடுத்து அதன் மீது வீசு!
டைகர் ஆற்றில் இறங்கி படகில் இருந்து தொங்கிக் கொண்டிருந்த கயிறை பிடிக்க முயன்றது.
அலெக்ஸ்! ஸ்பேனரை எடுத்து டைகரை நோக்கி வீசினான்.
பிசாசு இத்தோடு தொலைந்தது!

ஸ்பேனர் டைகரை நோக்கி வரவும், டைகர் தலையை குனியவும் சரியாக இருந்தது.
ஸ்பேனர் தண்ணீருக்குள் பொத்தென்று விழுந்தது.
இத்தோடு பிசாசின் கதை முடிந்து விட்டது! இனி கவலையில்லை!
இருவரும் தப்புக் கணக்கு போட்டார்கள்.
இரண்டு சிறுவர்களை அவர்கள் கடத்திச் செல்கிறார்கள்! டைகர் அவர்களை விரட்டிச் செல்கிறது! உடனடியாக கமிசனருக்கு தகவல் கொடுக்க வேண்டும்!
கரையில் இருந்து பார்த்துக் கொண்டு இருந்த போலீஸ்காரர் துரிதமாக செயல்படத் தொடங்கினார்.

ஜூலியையும், டேவிட்டையும் கட்டிப் போட்டிருந்த அறைக்கு மார்ட்டின் வந்தான்.
உங்களாலும் அந்தக் கறுப்புப் பிசாசாலும் நிறைய தொல்லைகள் இருந்து வந்தது. இனி கவலையில்லை'
எங்களுடைய டைகர் உங்களை சும்மா விடாது!
டைகரா! அது உயிரோடு இருந்தால்தானே! அப்பொழுதே அதை கொன்றுவிட்டேன்!
மார்ட்டின் எக்காளமிட்டுக் கொண்டிருந்தான்.
ஆனால், டைகரோ அவர்களை ஏமாற்றிவிட்டு, படகின் கயிற்றை கவ்விக்கொண்டு ஆற்றில் விரைந்து வந்து கொண்டிருந்தது.


கொள்ளையர்களின் படகு நியூயார்க் நகரின் எல்லையை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. டைகரும் விடாமல் கயிற்றை பிடித்து தொடர்ந்து வந்துகொண்டிருந்தது.

அதே நேரம்–
அப்படியா? இப்போதே ஆற்றங்கரை காவல் நிலையத்துக்கு தகவல் கொடுத்து தேடச் சொல்கிறேன்!

டைகரை காப்பற்றப் போய் இப்பொழுது அந்த சிறுவர்களும் ஆபத்தில் சிக்கியிருக்கிறார்கள்! எப்படியாவது அவர்களை காப்பாற்ற வேண்டும்!
கமிசனரும் புறப்பட்டார்.

இருட்டில் கொள்ளையர்களின் படகு ஒரு சிறிய படகுத் துறையை தேடி வந்து நின்றது. அங்கே ஒரு மர வீடு இருந்தது.
எங்களை என்ன செய்யப போகிறீர்கள்!
முதலில் உள்ளே வாருங்கள்! பிறகு சொல்கிறேன்!
உள்ளே இன்னும் இரண்டு கொள்ளையர்கள் இருந்தார்கள்.
ஏய்...! வெளியில் காவல் பலமாக இருக்கட்டும்.
கார் தயாராக இருக்கிறதா!
இருக்கிறது மார்ட்டின்! இவர்களை நான் கவனித்துக் கொள்கிறேன்!
படகை பின்தொடர்ந்து வந்த டைகர் கரையேறி, ஜீப்பின் முனகல் சத்தம் கேட்டு, மாடிக்கு வந்தது
மாடியில் இருந்த அறையின் சன்னல் திறந்திருந்ததால் டைகர் தந்திரமாக செயல்பட்டு சன்னலுக்கு தாவியது.

டைகர் சன்னலில் கம்பீரமாக நின்றுகொண்டு ஒரு முறை அந்த அறையை நோட்டமிட்டது.
ஆ...! நம்ம டைகர் சாகவில்லை. உயிரோடுதான் இருக்கிறது!
டைகரைப பார்த்து இருவரும் ஆச்சரியப்பட்டார்கள்.
சரியான நேரத்துக்குத்தான வந்திருக்கிறது! வா டைகர்...!

டைகர் உடனே கீழே குதித்து. அவர்களின் கட்டுகளை அவிழ்த்துவிட்டது.
சீக்கிரம் டைகர்! நல்ல டைகர்!
உயிர் கொடுப்பான் தோழன் என்றால் அது நீதான்!

டைகர்! நீ மட்டும் வராவிட்டால், நாங்கள் அவ்வளவுதான்!
உஷ்...! ஜூலி நாம் முதலில் இங்கிருந்து தப்பிக்க வேண்டும்!
கீழே கொள்ளையர்கள் கொள்ளையடித்த நகையை பங்கு போட்டுக் கொண்டிருந்தார்கள்.
நாம் நடத்தியதில் இதுதான் மிகப் பெரிய கொள்ளை!
ஆமாம்! இதுதான் கடைசியும் கூட!
ஜூலி! இதுதான் கீழே போகும் வழி என்று நினைக்கிறேன்!
கீழே போனால் கொள்ளையர் நம்மை பிடித்துவிட மாட்டார்களா!
இருவரும் தப்பிப்போக திட்டம் போட்டார்கள்.


அதே நேரம்- போலீசாரின் இயந்திரப் படகு அந்தப் பகுதியில் நுழைந்து, தீவிரமாக கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். படகில் கமிசனரும் இருந்தார்.
இந்த இடத்திற்கு பலமுறை ரோந்து வந்திருக்கிறோம்!
கொள்ளையர்கள் இருப்பதற்கான அறிகுறியே தென்பட்டது இல்லையே!
போலீசார் ஒவ்வொரு இடமாக விளக்கொளியை பாய்ச்சி நோட்டமிட்டுக் கொண்டே வந்தார்கள்.

வேறு வழியில்லாமல் டேவிட்டும், ஜூலியும் சன்னலுக்கு வந்தார்கள்.
ஜூலி! இவ்வளவு உயரத்தில் இருந்து எப்படி கீழே குதிக்க முடியும்!
இரு டேவிட்! ஆற்றில் ஏதோ விளக்கொளி தெரிகிறதே! யாரோ வருகிறார்கள்!


சார்...! அங்கே சன்னலைப் பாருங்கள்!
ஆமாம்! இரண்டு சிறுவர்கள் நிற்கிறார்கள்! கீழே இயந்திரப் படகு வேறு நிற்கிறது! சந்தேகமில்லை! சரி, படகை அங்கே செலுத்து!
போலீசார். அவர்கள் இருக்கும் இடத்தை கண்டுபிடித்தனர்.

அதே நேரம்– வெளியில் இருந்து வரும் ஓசையை கேட்டு கொள்ளையர்கள் சுதாரித்தார்கள்.
டேய்...! என்ன சத்தம்! அந்தப் கறுப்புப் பிசாசு மீண்டும் வந்துவிட்டதா?
தெரியவில்லையே!
இரு பார்க்கிறேன்!

அந்த வீட்டை போலீசார் முற்றுகையிட்டதும் கொள்ளையர்கள் தப்பியோட முயன்றனர்.
விடாதீர்கள்! விரட்டிப் பிடியுங்கள்!
ஆ! போலீஸ் வந்துவிட்டது! டேய்! சீக்கிரம் காரை கிளப்பு!
காரை நோக்கி ஓடிவந்த கொள்ளையர்கள் அப்படியே வெலவெலத்துப் போனார்கள்.
ஆ... கறுப்புப் பிசாசு! இன்னும் சாகவில்லையா? சனியன் நம்மை விடாது போலிருக்கிறது.
டைகர் காருக்கு அருகில் அவர்களுக்காக காத்துக்கொண்டிருந்தது.
அதற்குள் போலீசார் கொள்ளையர்களை சுற்றி வளைத்துப் பிடித்தார்கள்
பரவாயில்லை! ஒரு பெரிய கொள்ளைக் கூட்டத்தையே பிடித்துக் கொடுத்திருக்கிறீர்கள்!
இதில் டைகருக்குத்தான் மிகப் பெரிய பங்கு சார்!
கமிசனர் அவர்களை பாராட்டினார்.

டைகர் என்ன பையை கவ்விக் கொண்டு வருகிறது!
டைகர் ஒரு பையை கவ்விக்கொண்டு ஓடிவந்தது.
டைகர்! எங்கிருந்து எடுத்து வருகிறாய்!
அட! திருட்டுப் போன நகைகள்!
பரவாயில்லை! ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்துவிட்டோம்!
மறுநாள்.
டைகர் நமக்கு துணை இருந்தால் இன்னும் இதைப் போல் நிறைய கொள்ளையர்களை நாம் பிடிக்கலாம்!
ஆசையாகத்தான் இருக்கிறது! ஆனால் ஆபத்தான செயல் ஆயிற்றே!
ஜூலி! கமிசனர் என்னுடன் போனில் பேசினார்! அதை எப்படிச் சொல்ல...!
திடீரென்று எட்வின் பீடிகை போட்டார்..

கமிசனர் சொன்ன விசயத்தை எட்வின் பக்குவமாக அவர்களிடம் சொன்னார்.
டைகர்! எங்களைவிட்டு பிரியப் போகிறாயா?
ஜூலி! டைகர் துப்பறியும நாய்! அது இருக்க வேண்டிய இடத்தில்தான் இருக்க வேண்டும்!
டைகரை கமிசனரிடம் ஒப்படைக்க ஜூலியும் டேவிட்டும் வந்தார்கள்.
உள்ளே வாருங்கள் ஜூலி! டேவிட்...!
டைகர்! நீ இங்கேதான் இருக்க வேண்டுமாம்!
அதுதான் உனக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!
அவர்களைவிட்டு பிரியப் போகிறோம் என்று டைகருக்கு தெரிந்ததும், தன் உணர்ச்சியைக் காட்டியது. ஜூலியின் மீதும் டேவிட்டின் மீதும் மாறி மாறித் தாவியது.


கமிசனர் அவர்களை உள்ளே அழைத்துப் போனார்.
இதோ இவருடைய பாதுகாப்பில்தான் டைகர் இருந்தது. இப்போது விடுமுறையில் இருந்து இவர் திரும்பிவிட்டார்!
ரொம்ப நல்லது சார்!
சொல்லிவிட்டு ஜூலியும் டேவிட்டும் கண்கலங்கினார்கள்.

ஜூலி! நான் அடுத்த மாதம் ஓய்வு பெறப் போகிறேன்! அத னால் டைகரை உன் கண் காணிப்பிலேயே வைத்திருக்கலாம்!
சார்! உண்மையாகவா?

ஆமாம் ஜூலி! நாங்கள் அப்பொழுதே முடிவு செய்துவிட்டோம்! தேவைப்படும்போது டைகரை அழைத்துக்கொண்டு வந்துவிடுவோம்!
அய்யா ஜாலிதான்! டைகர் இனி எங்களுடன்தான் இருக்கும்!
டைகரை பத்திரமாக கண்காணிக்க வேண்டும்! ஏன் என்றால் டைகருக்கு எதிரிகள் அதிகம்! எச்சரிக்கை!
ஓ.கே. சார்! எங்கள் கண் இமை போல டைகரை காப்போம்!
கமிசனரின் முடிவு ஜூலி. டேவிட். டைகர் மூவருக்கும் ஆனந்தமாக இருந்தது.
(முடிந்தது)

ரூ. 500 பரிசு!

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களை உற்றுப் பாருங்கள். அவற்றின் பெயர்களில் இருந்து ஓர் எழுத்தை மட்டும் எடுத்து ஒன்று சேருங்கள். ஒரு மீன் கிடைக்கும். அது எது? கண்டுபிடியுங்கள் பார்ப்போம். உங்களுக்காக ரூ. 500 பரிசு காத்திருக்கிறது!

அது என்ன மீன்? என்பதை (பெயரை மட்டும்) ஓர் அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புங்கள். முகவரி எழுதவேண்டிய இடத்தில், இத்துடன் உள்ள முகவரி கூப்பனை வெட்டி ஒட்ட வேண்டும்.

சரியான விடை எழுதியவருக்கு ரூ. 500 பரிசு கொடுக்கப்படும்! பலபேர் சரியான விடை எழுதியிருந்தால், பரிசுக்கு உரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்து எடுக்கப்படுவார்கள்.

முடிவு தேதி: 13-10-91.

அனுப்ப வேண்டிய முகவரி:-

கண்டுபிடியுங்கள்,
"ராணி காமிக்ஸ்",
சென்னை-600 007.

கண்டுபிடியுங்கள் - 37

பரிசு பெற்றவர்கள்:-

செப்டம்பர் 1-ந்தேதி வெளியான "ராணி காமிக்ஸ்" கண்டுபிடியுங்கள் போட்டியின் விடை:- கர்நாடகம்.

நூற்றுக்கணக்கானோர் சரியான விடை எழுதியிருந்ததால், பரிசுக்குரிய 25 பேரை குலுக்கல் முறையில் தேர்ந்து எடுத்தோம்.

பரிசுத்தொகை ரூ. 500, ஆளுக்கு ரூ. 20 வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டது.

பரிசு பெற்றவர்கள்:-

(1) எஸ். ராஜேசுவரி, சென்னை-86. (2) என். நாராயணசாமி, வத்தலக்குண்டு. (3) கீதாராணி, கும்பகோணம். (4) ஏ.எஸ். ஆசிப், திருக்கோவிலூர். (5) இ. சாவித்திரி, கிருஷ்ணகிரி.

(6). மு. ரங்கசாமி, வீரப்பம்பாளையம். (7) கு. அடைக்கலசாமி, நமனசமுத்திரம். (8) பி. வாசுகி, மதுரை-1. (9) சி. ரெங்கராஜன், நடுக்காவேரி. (10) பிரேமா செல்வராஜ், காட்பாடி.

(11) பா. சுகுமாரன், துலுக்கப்பட்டி. (12) ஏ. பவுலின் மேரி, நெல்லிக்குப்பம். (13) ஆர். வெங்கட்ரமணன், செய்யாறு. (14) எம். விசாலாட்சி, செகந்திராபாத். (15) பே. பூவதி, நாச்சார்குப்பம்.

(16) எம்.எஸ். சித்ரா, கிருஷ்ணகிரி. (17) எம். பாலசுப்பிரமணியம், கிரனூர். (18) எஸ். தேவகி, பேராவூரணி. (19) இ. குலாபி, நாமக்கல். (20) என். குணவதி, பாண்டி-5.

(21) ஆர். மணிகண்டன், முசிறி. (22) பி. ரம்யா, தேவலாபுரம். (23) ஏ.எஸ். கதிரவன், நரிக்கல்பட்டி. (24) எம்.ஏ. சேக்முகம்மது பசீர், திருநெல்வேலி. (25) இ. கவிதா, சென்னை-12.

❊

மரண தண்டனை!

சவுதி அரேபியாவில்தான் குற்றம் செய்தவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படுகிறது என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால். சீனாவிலும் அதே முறையை இப்போது பின்பற்றத் தொடங்கிவிட்டார்கள்.

சமீபத்தில் 'ஷாங்காய்' நகரில் தங்கம், வெள்ளி போன்ற பொருட்களை திருடியதாக ஐந்து பேரை கைது செய்து. அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. திருடர்கள் ஐந்து பேரையும் வரிசையாக நிற்க வைத்து, காக்கா குருவியை சுடுவது போல சுட்டுக் கொன்றார்கள்.

சீனாவில், கடந்த எட்டு ஆண்டுகளில் இதுவரை 10 ஆயிரம் பேருக்கு இந்த மாதிரி கடுமையான மரண தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது.

குடிகாரர் ஒருவர். குடியினால் ஏற்படும் தீமைகளை விளக்கும் புத்தகங்களைப் படித்தார். முடிவில் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. புத்தகங்கள் படிப்பதையே விட்டுவிட்டார்.

"சேலை" அரிசி!

ஜப்பான் நாட்டில் புதுவகையான அரிசி ஒன்றை கண்டுபிடித்து இருக்கிறார்கள். அதற்கு சேலை (சாரி) என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். டோக்கியோவுக்கு அருகில் உள்ள டக்குசிலில் இந்தப் புது வகையான அரிசி பயிரிடப்படுகிறது. சேலை அரிசிக்கு இப்போது ஜப்பானில் ஏகப்பட்ட கிராக்கி!

கேட்டான்.

"என் முதலாளியாவது, விருந்து போடுவதாவது. என்ன விளையாடுகின்றீர்களா? அப்படி அவர் விருந்து போடுவதாக இருந்தால், கண்டிப்பாக இந்தப் பிறவியில் இல்லை. அடுத்த பிறவியில்தான் பார்க்க வேண்டும்" என்றான் வேலைக்காரன்.

வேலைக்காரன் சொன்னதைக் கேட்ட கஞ்சனுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது. "உன்னை யாருடா என்னைக் கேட்காமல் அடுத்த பிறவியில் விருந்து இருக்கிறது என்று சொன்னாய்?" என்று கஞ்சன் பூமிக்கும், வானத்துக்கும் எகிறிக் குதித்தான்.

டாக்டர் ஒருவருக்கு திருமணம். திருமணத்தன்று மணப்பெண்ணுக்கு மணமகன் மோதிரம் போட்டுவிட வேண்டும் என்பது சம்பிரதாயம்.

டாக்டர், திருமணத்தின் போது பெண்ணின் கையில் மோதிரம் போடுவதற்காக கையைப் பிடித்தார். பிடித்தவர், ஏதோ நினைவாக பெண்ணின் நாடித் துடிப்பை பார்க்க தொடங்கிவிட்டார். பிறகு, "எங்கே. உங்கள் நாக்கை நீட்டுங்கள்" என்றார் டாக்டர். கூடியிருந்தவர்கள் அனைவரும், டாக்டரை உசுப்பிவிட்டு மோதிரத்தை போடச் சொன்னார்கள்.

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ. மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

அடுத்த காமிக்ஸ்

முகமூடி வீரர்

மாயாவி

தோன்றும்

கடத்தப்பட்ட நடிகை

கடத்தல் பேர்வழிகள் பணம் பறிப்பதற்காக, நடிகையை கடத்தி காட்டுக்குள் கொண்டு வருகிறார்கள். காட்டுக்குள் வந்தால் மாயாவி விடுவாரா என்ன?

திகைக்க வைக்கும் மர்மப் படக்கதை!

படிக்கத் தவறாதீர்கள்.

அக்டோபர் 16-ந்தேதி வெளிவருகிறது.

"ராணி காமிக்ஸ்," சென்னை-600007

மேகி கிளப்
பரிசுகள், இலவசம்,
வனவிலங்குகளுடன்
பெறுவீர், உல்லாசம்!
குழந்தைகளே! மேகி கிளப்பில் சேருங்கள் வருடம்
பூராவும் கொண்டாட்டம் பெறுங்கள்.
இந்த சின்னத்தை மேகி நூடுல்ஸ் 5 காலி
உறைகளின் முன்பக்கத்திலிருந்து வெட்டி எடுத்து
எங்களுக்கு அனுப்புங்கள். உங்கள் பெயர்,
விலாசத்துடன் உங்களுக்குப் பிடித்த பரிசையும்
குறிப்பிட்டு எழுதுங்கள். நீங்கள் மேகி கிளப்
உறுப்பினராக இருந்தால் உறுப்பினர் எண்ணையும்
குறிப்பிட மறந்துவிடாதீர்கள். இதுவரை உறுப்பினர்
ஆகவில்லை என்றால் இப்போது ஆகலாம்.
மேலே குறிப்பிட்ட விவரங்களை அனுப்பும்போது,
உறுப்பினர் ஆக விரும்புவதாகவும் எழுதுங்கள்
நாங்கள் உங்கள் பரிசுப் பொருளுடன் இலவச மேகி
கிளப் உறுப்பினர் அட்டையையும் அனுப்புவோம்.
எங்கள் விலாசம்:
மேகி கிளப்
தபால்பெட்டி எண் : 5788,
புது டில்லி 110 055
KING OF THE JUNGLE
TO LET
Archie
Name:
Membership No: